# 53. திருச்செங்கோடு.

*அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.*
*பண் - நட்டராகம்.*

**நீ**ரு லாநெடு வேணியன் மேல்விழி நின்றெழு சுடராகிச்
சீரு லாம்வர கங்கைப டிந்தறு தெரிவையர் முகையுண்டே
ஏரு லாமுரு வம்பல காட்டிமெய் யிறைவியின் பாலருந்திச்
சூரி லான்மலை சென்றவ னாலயஞ் சுடர்திருச் செங்கோடே. 1

**இ**ரவி யேழ்பசுங் கொய்யுளை சந்திர னிரதமென் பவைகளிலும்
நிருதி வாயுகு பேரனு தாசன னீரிறை யிந்திரன்மா
தரும னீடுகைம் மாக்களி லும்பல சாரி புரிந்தகுகன்
கருது வார்க்கருள் செய்பதி நன்மணங் கமழ்திருச் செங்கோடே. 2

**சா**ர்த்தூ லத்திலும் யாட்டெழி லேற்றிலுஞ் சரபவி ராசனிலும்
ஏர்ச்சீ யத்திலு மான்கரு டன்சுசி யெகினமென் பவைகளிலும்
பார்த்தோர் விம்மிதங் கூரவி ருந்துபல் பவனி புரிந்தகுகன்
சீர்த்தூ யன்பரை யாள்பதி நல்லறஞ் சேர்திருச் செங்கோடே. 3

**ஒ**ப்பி லாச்சிறு பிள்ளையென் றாகியெவ் வுலகவஞ் சியராலும்
தப்பி லாசையி னாலெடுத் தெக்கழுத் தங்கொள வவரவர்முன்
செப்ப மோடுசென் றேபினர் மூப்புயர் தேகியைப் போலாகிக்
கப்பி லாத்தடி யூன்றிநின் றோன்சின கரந்திருச் செங்கோடே. 4

**ப**ட்ட தாரு துளிர்த்திடக் கானுறை பருவிலங் கெல்லாமும்
கிட்ட வந்திசை கேட்டவ சங்கொளக் கின்னர நனிமீட்டி
வட்ட மாமுகை யார்விர கங்கொள வார்குழ லினிதூதி
மட்டி லாவிளை யாட்டயர் சேயுறை மலைதிருச் செங்கோடே. 5

**எ**ண்ணி லாமுக மெண்ணறு காதுக ளெண்ணறு நறுநாக்கள்
எண்ணி லாவிழி யெண்ணறு நாசிக ளெண்ணறு கரதலங்கள்
எண்ணி லாவடி வுள்ளகு கேசுர னெண்ணறு கருணையினால்
எண்ணி லாவடி யார்க்கருள் செய்பதி யெழிறிருச் செங்கோடே. 6

**ப**ன்னா ளும்பல துன்பினை யேதரு பகைஞர் குழாமறுத்தே
என்னோ டண்டரெ லாரையு மாண்டரு ளென்றரி வேண்டினகால்
நன்னார் மிக்குடை யீர்சொன வாறினி நாமருள் செய்துமெனாச்
சொன்னோ னன்பரை யாள்பதி யம்பொழில் சூழ்திருச் செங்கோடே. 7

**ந**ம்ப னீபடை வேந்தினை வாங்கிவிண் ணாடருஞ் சிவகணமும்
கும்ப லாவெழு தரப்புவி வந்தொரு குன்றையும் வலிசான்ற
தும்பி மாமுகன் றன்னையு மாய்த்துயர் சூரன தூர்போந்த
எம்பி ரான்றளி யாவது நீர்வள மெழுதிருச் செங்கோடே. 8

**சி**ங்க மாமுகன் பானுமு னிந்தவன் சிரமறுப் புண்டபின்னர்த்
துங்க வேல்கொடு சூரனை யீர்ந்துயர் துசம்பரி யெனவாக்கிப்
பொங்கு வீரர்க ளோடுசெ யந்திபுக் கிருந்துப ராசலம்போந்
தங்க ணாறற வோர்குரு வானவ னமர்பதி செங்கோடே. 9

**மா**றி லாக்கஜ நாயகி தன்னைநன் மணம்புரிந் திந்திரற்கோர்
ஊறி லாமுடி சூட்டுபு வள்ளியை யுவப்பொடு கைப்பிடித்துக்
காறி லாப்புகழ் பாடிய வெந்தையின் கருத்தினை நிறைவேற்றி
ஈறி லாதொளிர் கின்றவ னன்கிருப் பதுதிருச் செங்கோடே. 10

சார்வரி வருடம் ஆவணி மாதம் 30ஆம் தேதி சுக்கிரவாரம்.